بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்

November 29
2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப்**

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:** இறைவன், அவனைப் பற்றிய அறிவையும், அவனது நெருக்கத்தையும் பெற வேண்டும் என்பதற்காக மனிதனைப் படைத்துள்ளான்.

*(51:57)* وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

எவர் ஒருவர் இந்த அசல் நோக்கத்தைக் கண்முன் நிறுத்தமாட்டாரோ, மேலும் இரவும், பகலும் உலகினைப் பெற வேண்டும் என்பதற்காக முயற்சி செய்வாரோ அந்த இடத்தை விலைக்கு வாங்க வேண்டும்; அந்த வீட்டைக் கட்ட வேண்டும். அந்த சொத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற சிந்தனையில் இருப்பாரோ, அப்படிப்பட்ட மக்களுக்கு இறைவன் சிறிது காலம் காலஅவகாசம் கொடுத்து பின்னர் திரும்ப அழைத்துக் கொள்வான். மேலும் அவர்களுடன் மிகவும் கடினமாக நடந்து கொள்வான்.

மனிதனது உள்ளத்தில் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கு ஒரு வேதனை இருக்க வேண்டும். அதன் மூலம் அவன் அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியம் அளிக்கப்படும் ஒரு பொருளாக ஆகி விடுகின்றான். இந்த வேதனை அவனது உள்ளத்தில் இல்லாமல், உலகம் மற்றும் அதில் உள்ளவற்றைப் பற்றி மட்டுமே வேதனை இருக்கும் என்றால் பிறகு இறுதியில் சிறிது காலம் காலஅவகாசம் பெற்று அழிந்து போய் விடுவான்.

மேலும் கூறுகின்றார்கள்: வருத்தமான விசயம் என்னவென்றால், உலகிற்கு வரக்கூடிய பெரும்பான்மையான மக்கள் பருவ வயதை அடைந்த பிறகு தனது பொறுப்பை உணர்வதற்குப் பதிலாக தனது வாழ்வின் குறிக்கோளை கண்முன் நிறுவதற்குப் பதிலாக இறைவனை விட்டு விட்டு உலகின் பக்கம் சென்று விடுகின்றனர். உலகச் செல்வங்கள் மற்றும் உலகக் கண்ணியத்தை எந்த அளவு விரும்பக் கூடியவர்களாக இருக்கின்றனர் என்றால் அங்கு இறைவனின் பங்கு மிகவும் குறைவாக எஞ்சியிருக்கிறது. பலரது உள்ளங்களில் இவை இருப்பதேயில்லை. அவர்கள் உலகிலேயே மூழ்கி மாய்ந்து விடுகின்றனர். இறைவன் என்று யாராவது இருக்கின்றானா? என்ற எண்ணமே அவர்களிடம் இல்லை.

ஆக, *(51:57)* وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

என்ற இறைவனின் கூற்றின் பொருள் இதுவாகும். அதாவது ஒவ்வொரு விசயத்திலும் இந்த விருப்பத்தைக் கண்முன் நிறுத்துவதே உண்மையான இறைவணக்கம் ஆகும். உண்மையான இறைவணக்கம் என்பது இறைவனது கட்டளைகளைக் கண்முன் வைப்பதே ஆகும். உலகத்தை சம்பாதிக்க வேண்டும் என்றால், அதுவும் இறைவன் காட்டிய வழிமுறைகளின் படியே சம்பாதிக்க வேண்டும். மேலும் உலகத்தை சம்பாதிப்பதே எந்நேரமும் நோக்கமாக இருக்கக் கூடாது. பிறகு இதற்காக தவறான சூழ்ச்சி, உண்மை, பொய், ஏமாற்றுதல் போன்றவற்றைப் பயன்படுத்துவது கூடாது. இறைவனை முற்றிலுமாக மறந்து விடக் கூடாது. இறைவணக்கத்தின் உரிமை தொழுகையால் மட்டுமே நிறைவேறி விடாது. கடந்த குத்பாவில் இதனைப் பற்றி நான் எடுத்துரைத்திருந்தேன்.

இறைவனது ஏனைய கட்டளைகளைக் கண்முன் வைத்தவாறு செயல்படவில்லையென்றால் பிறகு தொழுகைகளும் எந்தப் பயனும் அளிக்காது. உதாரணமாக, மனிதனது ஒவ்வொரு விசயத்திலும் உண்மை இல்லை என்றால் பிறகு இபாதத்துகள் செய்வது, பள்ளிவாசலுக்கு வந்து தொழுவது போன்றவை இறைவணக்கம் செய்யக் கூடியவர்களில் உங்களை இணைத்து விடாது. இதைப் போன்று பகைமை, பொறாமை, தப்பெண்ணம் போன்ற பல

தீமைகள் உள்ளன. இவைகள் இபாதத்திற்கான ஆன்மாவை அழித்து விடுகின்றன. ஓர் உண்மையான இறை அடியார் அல்லாஹ்வின் விருப்பத்தை எல்லா விசயத்திலும் கண்முன் வைக்கும் போதுதான் உண்மையான இறை அடியாராக அழைக்கப்படுவார். அவருக்கு உலகப் பலன்கள் எந்த விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. நான் பெரும்பாலும் இந்த விசயத்தை எடுத்துக் கூறி கவனமூட்டி வந்திருக்கின்றேன்.

இன்று நான், இந்தக் கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய குத்பாவிலிருந்து உங்கள் முன் எடுத்துரைப்பேன். சுருக்கமாக இருப்பினும் குறிப்பாக அதே சம்பவங்களை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது கருத்தை சம்பவங்களைக் கொண்டு எடுத்துரைப்பதே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதன் மூலம் சிலவற்றின் செயல் முன்மாதிரி நம் கண்முன் வந்து விடுகின்றன.

இந்த விசயத்தைத் தொடர்வதற்கு முன்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய அந்தஸ்தைக் குறித்து அவர்களது ஒரு கூற்றினை உங்கள் முன் வைப்பேன். இதன் மூலம் புதிய தலைமுறையினருக்கும் புதிதாக ஜமாஅத்தில் இணைந்தவர்களுக்கும் அறிவில் முன்னேற்றம் ஏற்படும்.

**1936 ஆம் ஆண்டு சூரா உடைய சமயத்தில் அன்னார் கூறினார்கள்:**

இறைவன் மக்கள் மூலமாக தேர்ந்தெடுக்கக் கூடிய ஒரு கிலாஃபத் இருக்கிறது. பிறகு அதனை இறைவன் ஏற்றுக் கொள்கின்றான். ஆனால் இது அப்படிப்பட்ட கிலாஃபத் அல்ல. அதாவது அன்னாரது கிலாஃபத்தைப் பற்றி கூறுகிறார்கள். நான் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மரணமடைந்த இரண்டாவது நாள் அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் ஒன்றிணைந்து எனது கிலாஃபத்தை ஏற்றுக் கொண்டதால் மட்டும் நான் கலீஃபா அல்ல. மாறாக நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இறைவனின் வஹியின் மூலம் நான் கலீஃபா ஆவேன் எனக் கூறினார்கள். அதனாலும் நான் கலீஃபா ஆவேன். ஆக, நான் கலீஃபா அல்ல. மாறாக வாக்களிக்கப்பட்ட கலீஃபா ஆவேன். நான் நபி ஒன்றும் கிடையாது. ஆனால் என்னுடைய வார்த்தை இறைவனுடைய வார்த்தை ஆகும். இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் இதனைப் பற்றி கூறினான்.

ஆக, இந்த கிலாஃபத்தின் அந்தஸ்து நபி மற்றும் கிலாபத்திற்கு இடைப்பட்ட அந்தஸ்து ஆகும். எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த சந்தர்ப்பத்தை புறக்கணித்து விடக் கூடாது. அவ்வாறு செய்தால் இறைவன் முன்பு வருத்தத்துடன் நிற்க நேரிடும். நபிமார்கள் ஒவ்வொரு நாளும் வருவதில்லை என்பது எந்த அளவு உண்மையோ, அதேபோன்று வாக்களிக்கப்பட்ட கலீஃபாவும் தினம் தினம் வரமாட்டார் என்பதும் உண்மையாகும். ஆக, அன்னாரின் வருகை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்திற்குச் சான்றாகும். அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய அறிவு மற்றும் ஞானத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன்னரே அறிவித்திருந்தார்கள். இந்த வகையில் அன்னாருடைய அறிவு மற்றும் ஆற்றலிலிருந்து ஜமாஅத்தார்கள் சுயமாகவும் படித்துப் பயன் அடைய வேண்டும். பலமொழிகளில் நூல்கள் மொழியாக்கம் செய்யப்படவில்லை. எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் இது எடுத்துரைக்கப்பட வேண்டும் என நான் விரும்பினேன். இதனால் பல்வேறு விசயங்களைப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்து வந்துள்ளேன். சில மாதங்களுக்கு முன்பு ஒரு குத்பா முழுவதும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தேன். இன்று மீண்டும் அதே வழியில் சில விசயங்களைச் சுருக்கமாகவும் சிலவற்றை அப்படியேயும் எடுத்துரைப்பேன்.

*(51:57)* وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

அதாவது நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவும் அல்லது எனது அடியானாக ஆவதற்காககவுமே படைத்துள்ளேன். இந்தக் கருத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதனின் படைப்பு அந்த உயர்ந்த நோக்கத்திற்காக ஏற்பட்டுள்ளது. ஆனால் பெரிய பெரிய தத்துவவாதிகள், கல்வியறிவு படைத்த வர்க்கம் இந்த கேள்வியைக் கேட்கிறது. அதாவது மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தில் வெற்றி ஏற்பட்டுள்ளதா? இறைவன் மனிதனை எந்த நோக்கத்திற்காக படைத்தானோ அந்தப் பணியை மனிதனிடமிருந்து வாங்கி விட்டானா? மேலும் உண்மையில் மனிதன் இந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றானா? மேலும் உண்மையில் மனிதன் இறைவனது அடியான் என அழைக்கத் தகுதியாகக் கூடிய முன்னேற்றத்தை அடைந்து உள்ளானா? என கேள்விகளைக் கேட்கின்றனர்.

கூறுகின்றார்கள்: இதற்கு பதில், இல்லை என்பதாகும். எனவே அவர்கள் கேள்வி கேட்கின்றனர். மேலும் மனிதனைப் படைக்கக்கூடிய ஒருவன் இருக்கின்றான் என்றால் பிறகு இந்த நோக்கத்தில் வெற்றி ஏன் கிடைக்கவில்லை?

இதற்குரிய பதில் இதுவாகும். இறைவனது நபிமார்கள் இந்த கேள்விகளுக்கு பதில் கூறவே வருகின்றனர். மேலும் நன்மையை எந்த அளவு பரப்புவார்கள் என்றால் அதனைப் பார்த்து எதிரிகள் கூட இந்த நோக்கம் நிறைவேறி விட்டது என ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். அந்த நாள் வருவதற்காக ஆயிரம் நாட்கள் வரை காத்திருந்தாலும் அது ஒன்றும் பெரிதல்ல. எனவேதான் அல்லாஹ் நபிமார்களின் வருகையை லைலத்துல் கத்ர் எனக் கூறியுள்ளான். இதனால் لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ அதாவது அந்த ஓர் இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும்.

ஆக, நபிமார்கள் மூலம் உலகிற்கு கிடைக்கப்பெறும் அருள்களுக்கு எதிரில் ஒரு நூற்றாண்டின் மனிதர்களை இந்த ஒரு நாளுக்காக அர்ப்பணித்தாலும் அது குறைவே ஆகும்.

கூறுகின்றார்கள்: நான் செயல்ரீதியான சீர்திருத்தத்திற்காக சில குத்பாக்கள் கொடுத்தேன். அன்னார் 1936 –ல் சில குத்பாக்கள் செயல் சீர்திருத்தத்தைப் பற்றி கொடுத்திருந்தார்கள். அதில் கவனமூட்டி இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை எந்த மாபெரும் நோக்கத்திற்காக இருந்ததோ அதனை நிறைவேற்றுவதற்கு நீங்கள் பெரிய பெரிய தியாகங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும். இது அன்றைய காலகட்டத்திற்குரிய விசயம் மட்டும் கிடையாது. இது தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய விசயமாகும். இன்றும் இனிமேலும் இது அவசியமாகும். இதன் அவசியம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும்.

கூறுகின்றார்கள்: கொள்கை ரீதியில் நாம் உலகில் நிலைபெற்று விட்டோம். ஆனால் இப்போது செயல் அடிப்படையில் இஸ்லாத்தின் கண்ணியத்தை நிலைபெறச் செய்ய அவசியம் உள்ளது. ஏனென்றால் இவை இல்லாமல் பகைவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்த முடியாது. அன்னார் இதற்கு உதாரணமும் கூறினார்கள். செயல்ரீதியில் உண்மைக்கான உதாரணம் இதுவாகும். அதாவது உண்மையைக் குறித்து நான் ஓர் உதாரணம் கூறுகின்றேன். இதனை செயல் ரீதியில் பார்த்தோம் என்றால், இது எப்படிப்பட்ட விசயம் என்றால் இதனை எதிரிகள் கூட உணர்கின்றனர். உள்ளத்தின் தூய்மை மற்றும் ஈமான் எதிரிக்குத் தென்படுவதில்லை. மாறாக உண்மையை அவர்களால் பார்க்க முடியும். உண்மை இதுவேயாகும். அதாவது உண்மை அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அந்தக் காலத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மற்றவர்கள் சிலர் கடிதம் எழுதினர். தற்போதும் எனக்கும் மற்றவர்கள் சிலர் எழுதுகின்றனர். அதில் அவர்கள் மீது உண்மை ஏற்படுத்திய தாக்கத்தைக் குறித்து எழுதியிருக்கின்றனர். இதன் காரணமாக அவர்கள் ஜமாஅத்தைப் புகழவும் செய்கின்றனர். மேலும் எந்த அஹ்மதியின் மூலம் அவர்களுக்கு ஏமாற்றமும், பொய்யும் தென்பட்டதோ அப்போது அவர்கள் நாங்கள் ஜமாஅத்தின் நல்ல பெயரின் காரணமாக இவர்கள் மீது நம்பிக்கை கொண்டோம். ஆனால் உங்களுடைய இந்த இந்த ஜமாஅத் உறுப்பினர்கள் எங்களை ஏமாற்றி விட்டனர். மேலும் இவ்வாறு ஏமாற்றக் கூடியவர்கள் இது எங்களது சொந்த பிரச்சனை ஆகும். இது வியாபாரம் ஆகும். இதற்கும் ஜமாஅத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று கூறுகின்றனர். ஆனால் இறுதியில் அவர்கள் மக்கள் ஜமாஅத்தை குறை கூறுவதற்கும் அவப்பெயரை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்திற்கு முன்னுள்ள ஒரு சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள்.

குடும்ப சொத்து சம்பந்தமான ஒரு வழக்கு தொடரப்பட்டு இருந்தது. அதில் ஒரு இடம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் அந்த வீட்டிற்கு முன்பு ஒரு மேல்தளம் அமைக்கப்பட்டிருந்தது தொடர்பான வழக்காக அது இருந்தது. அதில் இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் அலுவலகங்கள் செயல்பட்டு வந்தன. ஆனால் காதியானில் தற்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அலுவலகங்கள் அங்கிருந்து மாற்றப்பட்டு விட்டன.

கூறுகின்றார்கள்: இந்த மேல்தளம் அமைக்கப்பட்டுள்ள இடம் எங்களது குடும்பத்தினருடையதாகும். ஆனால் அருகில் அமைத்திருந்த வீட்டினருடைய ஆதிக்கத்தில் தான் அது இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மூத்த சகோதரர் அதனைப் பெறுவதற்காக வழக்கு தொடர்ந்தார்கள். உலகவாதிகளின் வழக்கத்திற்கேற்ப பொய்யான மற்றும் உண்மையான சாட்சிகளைக் கொண்டு வந்து எதனை அவர்களது உரிமை எனக் கருதுகின்றார்களோ அதனை அடைய முயற்சிப்பார்கள். இதனைப் போன்று அன்னாருடைய மூத்த சகோதரருக்கும் அவ்வாறே செய்தனர். அவர் பல்வேறு சாட்சிகளைக் கொண்டு வந்தார். அதற்கு வீட்டின் சொந்தக்காரர்கள் எங்களுக்கு எந்தவிதமான ஆதாரமும் தேவையில்லை. இவரது சிறிய சகோதரரை அழைத்து அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அழைத்து அவர் என்ன கூறுவாரோ அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்றனர். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். மேலும் அன்னாரிடம் இந்த மக்கள் இந்த வழியாக வந்து போவதையும் அமர்ந்து செல்வதையும் நீண்ட காலமாக நீங்கள் பார்த்து வருகின்றீர்களா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் ஆமாம். நான் பார்த்து வந்துள்ளேன் என்றார்கள். நீதிமன்றம், எதிர் தரப்பினருக்கு

சாதகமாக தீர்ப்பு வழங்கியது. இதனால் அன்னாருடைய சகோதரர் அன்னார் மீது கடுங்கோபம் கொண்டார். அதற்கு அன்னார், உண்மை இதுவாக இருக்கும் போது, நான் எவ்வாறு மறுப்பேன் என்றார்கள்.

இதனைப் போன்று அன்னார் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. அதில் அவர்கள் தபால் நிலைய அதிகாரிகளை ஏமாற்றி விட்டதாகக் கூறப்பட்டிருந்தது. யாராவது ஒருவர் ஏதாவது ஒரு பாக்கெட்டில் பார்சலில் ஏதாவது கடிதம் ஒன்றை வைத்து அனுப்பினால் அவர் தபால் நிலையத்தை ஏமாற்றி பணத்தை மிச்சப்படுத்தியுள்ளார் என்றும் இவ்வாறு செய்யக்கூடாது என்பதும் சட்டமாகும். இவ்வாறு செய்வது குற்றமாகும். இதற்கு கைது செய்து தண்டனை வழங்கப்பட்டு வந்தது. அன்னார் ஒரு கட்டுரையை அச்சிடுவதற்காக அச்சகத்திற்கு ஒரு பார்சலை அனுப்பியிருந்தார்கள். அதனுள் ஒரு கடிதமும் வைத்திருந்தார்கள். அது அந்தக் கட்டுரை தொடர்பானதாகவே இருந்தது. அதனை அன்னார் அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியாகவே கருதினார்கள். அன்னாருக்கு அரசாங்கத்திற்கு இழப்பை ஏற்படுத்துவது நோக்கமாக இருக்கவில்லை.

கிறிஸ்தவராக இருந்த அந்த அச்சக உரிமையாளர் இதனை ரிப்போர்ட் செய்தார். பிறகு அன்னார் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கு தொடர்ந்த எதிர் தரப்பினருடைய கூற்று தெளிவாக உள்ளது. சாட்சிகளிடம் எந்த உண்மைத் தன்மையும் இல்லை. நீங்கள் நான் அந்த கடிதத்தை அதனுள் வைக்கவில்லை என்று கூறிவிடுங்கள் என வக்கீல் அன்னாரிடம் கூறினார். அதற்கு அன்னார், அவ்வாறு ஒருபோதும் கூற முடியாது. நான் செய்த வேலையை இல்லையென்று எவ்வாறு மறுக்க முடியும்? நீதிமன்றத்தில் வழக்கு வந்த போது, நீதிமன்றம் நீங்கள் இவ்வாறு ஒரு கடிதம் உள்ளே வைத்தீர்களா? எனக் கேட்டது. அதற்கு ஆம் வைத்தேன் என்றார்கள். மேலும் இதனை ஏமாற்றி வைக்கவில்லை. மாறாக இந்தக் கடிதத்தை கட்டுரையின் ஒரு பகுதியாக கருதியதனால் வைத்தேன் என்றார்கள். இந்த உண்மைத்தன்மைக்கு நீதிமன்றத்தில் எந்த அளவு தாக்கம் ஏற்பட்டதென்றால் இதுபோன்ற வார்த்தை பயன்பாட்டில் ஏற்பட்ட குற்றத்திற்காக ஒரு உண்மையான இறை நேசருக்கு தண்டனை வழங்க முடியாது என்று கூறி நீதிமன்றம் அன்னாரை விடுதலை செய்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது இதுபோன்ற எண்ணற்ற வழக்குகள் தொடரப்பட்டன. இதன் காரணமாக வழக்குகளுடன் தொடர்புடைய அந்த வழக்குறைஞர்களுடைய உள்ளத்தில் மிகுந்த கண்ணியம் இருந்தது. ஒரு வழக்கில் அன்னார் சேக் அலி அஹ்மது அவர்களை வக்கீலாக நியமிக்கவில்லை. அதற்கு அந்த சேக் அலி அஹ்மது சாஹிப் நீங்கள் என்னை வக்கீலாக நியமிக்காதது எனக்கு வருத்தமாக இருக்கின்றது. இது எனக்கு ஃபீஸ் கிடைக்காமல் போய் விட்டது என்பதால் வருத்தம் அடையவில்லை. மாறாக எனக்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லையே என எனக்கு வருத்தமாக இருக்கிறது எனக் கடிதம் எழுதினார்.

உண்மை எப்படிப்பட்ட விசயம் என்றால் எதிரியும் கூட இதிலிருந்து தாக்கம் பெறாமல் இருக்க முடியாது. சேக் அஹ்மது அலி சாஹிப் கடைசி வரை அஹ்மதி அல்லாதவராகவே இருந்தார். அஹ்மதி ஆகவே இல்லை. அவர்கள் பைஅத்தும் செய்யவில்லை. ஆனால் வெளிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அவர் கொண்டிருந்த நேசம் அஹ்மதிகளிடம் இருந்ததை விட குறைவானது கிடையாது. இது இவருடன் மட்டும் நின்றுவிட வில்லை. மாறாக யார் யாரெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தார்களோ அவர்களது நிலைமையும் இவ்வாறானதாகவே இருந்தது. ஜெஹ்லமில் மவ்லவி கரம்தீன் சாஹிப் அன்னார் மீது வழக்கு தொடர்ந்திருந்தார். அப்போது ஒரு இந்து வழக்குறைஞர் லாலா பீம்சிங் சாஹிபிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அதில் என்னுடைய பையன் மெஜஸ்டிரி பாஸ் செய்து வந்துள்ளான். மேலும் உங்களுக்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பு அவனுக்கு கிடைக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். அவனை உங்களது வழக்குறைஞராக வைத்துக் கொள்ளுங்கள் என அவர் எழுதியிருந்தார்.

இதில் கூறப்பட்ட பையன் தகுதியான வக்கீல் ஆவார். இவர் லூயிஸ் கல்லூரி உடைய பிரின்ஸிபல் ஆக பணியாற்றியுள்ளார். பின்னர் இந்தியாவின் உயர்நீதிமன்றத்தின் சீஃப் ஜட்ஜ் ஆக நியமனம் ஆகியிருந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: லாலா பீம் சிங் சாஹிப் எதனால் மிகவும் விருப்பத்துடன் அந்தக் கடிதத்தை எழுதினார் என்றால் ஸியால்கோட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் சில நாட்கள் தங்குவதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அவர் அன்னாருடைய உண்மைத் தன்மையைப் பார்த்திருந்தார். உண்மை எப்படிப்பட்டதென்றால் நம்மைச் சார்ந்தவர்கள் மீது மட்டுமல்லாமல் மற்றவர்கள் மீதும் தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நபிமார்கள் உலகில் வந்து உண்மையை நிலைநாட்டுகின்றனர். மேலும் எப்படிப்பட்ட உதாரணத்தை நிலைநாட்டுகின்றார்கள் என்றால் அதனை பார்க்கக் கூடியவர்கள் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியாது. நபி (ஸல்) அவர்கள் உலகிற்கு வந்து பீரங்கிகளையோ மிஷின்களையோ கண்டுபிடிக்க வில்லை. வங்கி எதுவும் தொடங்கவில்லை. தொழிற்சாலைகள் எதுவும் தொடங்கவில்லை.

பிறகு அன்னார் உலகிற்கு எதனைக் கொடுத்தார்கள்? எதனை பாதுகாப்பது அன்னாரைப் பின்பற்றக் கூடியவர்கள் மீது பொறுப்பாக இருந்தது? அது உண்மையின் ஆன்மாவாகும். உயர் நல்லொழுக்கம் ஆகும். இது முதலில் மறைந்து போய் இருந்தது. அதனை முதலில் அன்னார் பெற்றார்கள். பிறகு இந்த பொக்கிசத்தை உலகிற்குக் கொடுத்தார்கள். சஹாபாக்கள், அவர்களது பிள்ளைகள், பிறகு அவர்களது பிள்ளைகள் மீது இதனை பாதுகாப்பதே பொறுப்பாக இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது முதல் வஹி இறங்கிய போது அந்த கட்டளைக் கேட்ட பிறகு அதாவது உலகம் முழுவதும் இறைவனது வார்த்தையை எட்ட வைக்க வேண்டும் என்ற கட்டளையைக் கேட்டதும் பயந்து போனார்கள். அன்னார் இந்த மாபெரும் பணியை எவ்வாறு பூர்த்தி செய்வேன் என பயந்தார்கள். இந்த பயத்திலேயே வீட்டிற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அதிக அளவு வியர்த்ததால் அன்னார் குளுமையை உணர்ந்தார்கள். அன்னார் வீட்டில் நுழைந்தவுடன் என் மீது துணியை போர்த்துங்கள் என்றார்கள். அப்போது கதீஜா (ரலி) அவர்கள் உங்களுக்கு என்னவாயிற்று? எனக் கேட்டார்கள். இதற்கு நபி (ஸல்) அவர்கள் முழு சம்பவத்தையும் கூறினார்கள்.

அதனைக் கேட்ட ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், ஒருபோதும் அல்லாஹ் உங்களை இழிவடையச் செய்யமாட்டான். ஏனென்றால் உங்களிடத்தில் இந்த இந்த சிறப்பம்சங்கள் உள்ளன. அதில் ஒரு சிறப்பம்சமாக உலகிலிருந்து மறைந்த அந்த நல்லொழுக்கத்தை அதனை உங்களிடத்தில் மீண்டும் ஏற்படுத்தியுள்ளீர்கள். மனிதனின் தொலைந்துபோன நோக்கத்தை மீண்டும் கண்டறிந்துள்ளீர்கள். பிறகு உங்களை அல்லாஹ் எவ்வாறு வீணாக்குவான் எனக் கூறினார்கள்.

நபிமார்களின் வருகையின் நோக்கம் இதுவேயாகும். நம்பிக்கையாளர்களிடம் இந்த அமானத்து தான் இருக்கும். இதனைப் பாதுகாப்பது தான் அவர்கள் மீது கடமையாகும். அன்பின் காரணமாக நபிமார்கள் மூஃமின்களுக்கு மிகவும் விருப்பமானவர்களாக இருப்பார்கள். ஆனால் உண்மையில் நபிமார்களின் கண்ணியத்திற்கு காரணம், உலகில் பரப்புவதற்காக இறைவன் அவர்களிடம் அனுப்பிய ஒளியே ஆகும். இறைவனது அந்த தூதுச் செய்தி தான் அவர்களைப் பெரியவர்களாக ஆக்குகின்றது. நபிமார்களைப் பின்பற்றக் கூடியவர்கள் அந்த மாநபியைப் பாதுகாக்க தன்னையே மாய்த்துக் கொள்ளத் தயாராக இருந்தனர். பிறகு இந்த தூதுச் செய்தியைப் பாதுகாக்க எதனை செய்யத் தயங்குவார்கள்?

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்காக சஹாபாக்கள் தனது உயிரைத் தியாகம் செய்தனர். அந்த சம்பவங்களைப் படிக்கும் போது மெய்சிலிர்த்து விடுகின்றது. அவர்களது அன்பினைக் கண்டு இன்றும் அன்பின் அலைகள் உள்ளத்தில் எழுகின்றன. உஹது போரின் போது ஒரேயொரு சஹாபி மட்டும் நபி (ஸல்) அவர்களுடன் இருக்கக்கூடிய ஒரு நிலைமை வந்தது. எதிரிகள் தொடர்ந்து அம்புகளையும், கற்களையும் வீசிக் கொண்டிருந்தனர். அந்த சஹாபி தனது கையினை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முகத்திற்கு முன்பாக வைத்தார். அதில் எந்த அளவு அம்புகளும், கற்களும் விழுந்தன என்றால் அந்த கை முழுவதுமாக பாழாகிப் போனது. அந்த சஹாபியிடம் உங்களது கைக்கு என்ன ஆயிற்று? எனக் கேட்ட போது, அவர் கூறினார். எந்த அளவு அம்புகளும் கற்களும் இதன் மீது விழுந்தன என்றால், இது நிரந்தரமாக செயலிழந்து போய் விட்டது என்றார்கள். அதற்கு அந்த நபர் அப்போது உங்களது வாயிலிருந்து ஆஹ்! என்ற சப்தம் கூடவா வரவில்லை என்றார். அதற்கு அந்த சஹாபி மிகவும் அழகிய பதிலைக் கூறினார். அவர் கூறினார்: ஆஹ்! எனக் கூற முயன்றேன். ஆனால் நான் அவ்வாறு கூறவில்லை. நான் ஆஹ்! என்ற கூறியிருந்தால் கை அசைந்து போயிருக்கும். அதனால் ஏதாவதொரு அம்பு நபி (ஸல்) அவர்கள் மீது பட்டிருக்கும்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், நீங்கள் இந்தத் தியாகத்தை சிந்தித்துப் பாருங்கள். இன்று யாருடைய விரலிலாவது காயம் ஏற்பட்டால் அவர் எந்த அளவு சப்தம் இடுகின்றார். ஆனால் அந்த சஹாபி கையில் எந்த அளவு அம்புவின் தாக்குதலைத் தாங்கினார் என்றால் அந்த கை நிரந்தரமாக செயலற்றுப் போனது.

**அடுத்து மற்றொரு சஹாபியின் சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்:**

இதுவும் உஹதின் போது நடைபெற்ற சம்பவம் ஆகும். உஹது போரின் போது சில சஹாபாக்கள் பின்னால் செல்வதற்குரிய நிர்பந்தம் ஏற்பட்ட பிறகு மீண்டும் ஒன்றிணைந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் யார் யார்

சஹீதாகியுள்ளார்கள். யார் யார் காயம் அடைந்துள்ளார்கள் என்பதைப் பாருங்கள் என்றார்கள். அதன்படி சில சஹாபாக்கள் யுத்தக் களத்தைப் பார்வையிடச் சென்றார்கள். அப்போது ஒரு சஹாபி, ஒரு அன்ஸாரி சஹாபி மைதானத்தில் காயமடைந்து கிடப்பதைக் கண்டார். அவருக்கு அருகில் சென்றார். அங்கு சென்று பார்த்த போது கையும், காலும் வெட்டப்பட்டு இருந்தது. அது அவரது வாழ்வின் கடைசி நொடிப்பொழுதாக இருந்தது. அதனைக் கண்ட சஹாபி அவரது அருகில் சென்றார். உங்களது உறவினர்களுக்கு ஏதாவது தூதுச் செய்தி கூற வேண்டுமா? அவ்வாறிருந்தால் கூறுங்கள். அதனை நான் அவர்களிடம் எட்ட வைத்து விடுவேன் என்றார். அதற்கு அந்த காயமடைந்த சஹாபி, நான் யாராவது எனது அருகில் கடந்து செல்லமாட்டாரா? நான் அவரிடம் தூதுச் செய்தியைக் கூறுவதற்கு எனக் காத்துக் கொண்டிருந்தேன் என்றார். ஆக நீங்கள் எனது உறவினர்களிடம் எனது மனைவி மக்களிடம் இந்த தூதுச் செய்தியை எட்ட வைத்து விடுங்கள்.

அதாவது முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள் ஒரு விலை உயர்ந்த அமானத் ஆவார்கள். நாங்கள் உயிருடன் இருந்தவரை அவர்களைப் பாதுகாத்தோம். தற்போது நாங்கள் விடைபெற்றுச் செல்கின்றோம். அவர்கள் அதாவது உறவினர்கள் இந்த விலை உயர்ந்த அமானத்தைப் பாதுகாப்பார்கள் என நான் நம்புகின்றேன் என்றார்.

**முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள்! மரண சமயத்தின் போது அவர்களது மனைவி மக்களுக்கு தூதுச் செய்தியைக் கூறுவதற்கு வேறு சமயம் கூட கிடையாது. அப்படிப்பட்ட நேரத்தில் மனிதனுக்கு சொத்து செல்வம், கொடுக்கல் வாங்கல் பற்றி கூறுவதற்கான சிந்தனை தான் இருக்கும். மக்கள் தனக்குப் பின்னால் வருத்தத்தில் வாடுபவர்களது நன்மைகளைப் பற்றி கருத்தில் கொண்டவாறு விசயங்களைக் கூறுபவர்களாக இருப்பார்கள். ஆனால் இந்த சஹாபிக்கு அப்படிப்பட்ட நேரத்தல் இந்த சிந்தனை தான் வந்துள்ளது. அதாவது நான் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்காக எனது உயிரையும் அர்ப்பணிக்கின்றேன். மேலும் உறவினர்களிடமும் நான் உங்களிடமும் இதே நிலையில் நீங்களும் நிலைபெற்றிருப்பீர்கள் என நம்பிக்கை வைக்கின்றேன் எனக் கூறுகின்றார். மேலும் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களது உயிருக்கு எதிரில் உங்களது உயிரைப் பற்றி கவலைப்படமாட்டீர்கள் எனவும் நம்புகின்றேன் எனக் கூறினார்.

ஆக எந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக தியாகங்களைச் செய்தார்களோ, அவர்கள் அன்னார் கொண்டு வந்த தூதுச் செய்திக்காக எந்த அளவு தியாகங்களைச் செய்பவர்களாக இருந்திருப்பார்கள். இதற்காக சஹாபாக்கள் செய்த தியாகங்களில், உதாரணமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மரண சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டதாக சஹாபாக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. அப்போது அவர்கள் கொண்டிருந்த அதிக அன்பின் காரணமாக அதிக அளவு துக்கம் ஏற்பட்டது. எந்த அளவுக்கென்றால் சில சஹாபாக்கள் இந்த செய்தி தவறானது என்றே கருதினர். ஏனென்றால் தற்போது பெருமானார் உடைய மரண காலம் வரவில்லை. முஸ்லிம்களில் சில முனாஃபிக்குகளும் இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இந்த எண்ணத்திலேயே இருந்தார்கள். கையில் வாளை ஏந்திக் கொண்டு, எவராவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டதாகக் கூறினால் நான் அவரது தலையைத் துண்டித்து விடுவேன். பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்திற்குச் சென்றார்கள். பிறகு தான் மரணமடைவார்கள் என்றார்கள். பல சஹாபாக்களும் அன்னாருடன் இணைந்திருந்தனர். அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என எவரையும் கூற விடமாட்டோம் என்றார்கள். வெளிப்படையில் இது அன்பின் வெளிப்படாகும். ஆனால் இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனைக்கு மாற்றமானதாக இருந்தது.

ஏனென்றால் திருக்குர்ஆனில் தெளிவாக

*(3:145)* أَفَإِنْ مَاتَ أَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلَىٰ أَعْقَابِكُمْ

என்று வந்துள்ளது. அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ முஸ்லிம்களே! நீங்கள் குதிகாலில் திரும்பிச் சென்று விடுவீர்களா?

ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அங்கு இல்லாமல் வெளியில் சென்றிருந்தார்கள். அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்ததும் அவர்கள் மதீனா திரும்பி வந்தார்கள். நேராக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உடல் வைக்கப்பட்டிருந்த அந்த அறைக்குச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முகத்திலிருந்து துணியை அகற்றிப் பார்த்த போது உண்மையிலேயே அன்னார் மரணம் அடைந்திருந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது நெற்றியில் முத்தமிட்டார்கள். அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. பிறகு பெருமானார் உடலைப்

பார்த்து எனது தாய் தந்தையர் உம்மீது அர்ப்பணம்! அல்லாஹ் உங்களுக்கு இரண்டு மரணத்தை வழங்கமாட்டான். ஒன்று வெளிப்படையான மரணம்; மற்றொன்று அன்னார் கொண்டு வந்த போதனையை அழிய விடமாட்டான் என்பதாகும்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், சஹாபாக்கள் ஒன்றுகூடியிருந்த இடத்திற்கு வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கையில் வாளேந்தியவாறு மிகவும் உணர்வு பொங்க, எவர் நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று கூறுவாரோ அவர் முனாஃபிக் ஆவார். நான் அவரது தலையைத் துண்டித்து விடுவேன் என்று கூறி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அங்கு வந்தார்கள். மக்களை அமைதியாக இருக்கும்படி கூறினார்கள். மிகவும் சப்தமாக ஹஸ்ரத் உமரிடம் அமைதியாக இருங்கள்; என்னை பேச விடுங்கள் என்றார்கள். பிறகு,

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ۗ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ

انْقَلَبْتُمْ عَلٰٓى اَعْقَابِكُمْ ۗ

என்ற வசனத்தை ஓதினார்கள். அதாவது முஹம்மது ரஸூல் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். அதாவது அன்னாருக்கு முன்பு வந்த அனைத்து நபிமார்களும் மரணமடைந்து விட்டனர். அன்னார் மரணமடைந்தாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்களது மார்க்கத்தை விட்டு விடுவீர்களா? உங்களது மார்க்கம் முழுமையற்றது எனக் கருதுவீர்களா?

பிறகு மிகவும் உணர்வு பொங்க கூறினார்கள்:

மக்களே! உங்களில் எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தார்களோ அவர்கள் மகிழ்ச்சி அடையட்டும். நமது இறைவன் உயிருள்ளவன் ஆவான். அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான்.

மேலும் எவர் முஹம்மது ரஸூலுல்லாஹ்வை வணங்கி வந்தார்களோ அவர்கள் கேட்டுக் கொள்ளட்டும். அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மேற்கூறப்பட்ட வசனத்தை ஓதியபோது எனக்கு வானம் பிளந்தது போன்று தோன்றியது. எனது கால்கள் நடுங்க ஆரம்பித்தது. கால்களின் வலிமை சென்று விட்டது. நான் சோர்வடைந்து கீழே விழுந்து விட்டேன். அப்போதுதான் எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் எனத் தெரிய வந்தது.

பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு அன்பு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அன்னார் இறந்து விட்டார்கள் எனத் தெரிய வந்ததும் தன்னை அறியாமலேயே நபி (ஸல்) அவர்களது முகத்தில் முத்தமிட்டார்கள். கண்களிலிருந்து கண்ணீர் பொங்கியது. ஆனால் மறுபுறம் அன்னார் கொண்டு வந்த உண்மையின் மீத எந்த அளவு அன்பிருந்தது. ஹஸ்ரத் உமர் போன்ற வீரர், வாளைக் கையில் ஏந்திக் கொண்டு நிற்கின்றார். யாராவது அன்னார் இறந்து விட்டார்கள் எனக் கூறினால் அவரது உயிரை எடுத்து விடுவேன் எனக் கூறிக் கொண்டிருக்கின்றார். மேலும் பல சஹாபாக்கள் அவருடன் ஒருமித்த கருத்து கொண்டவர்களாக இருந்தனர். இவை அனைத்திற்கும் எதிராக பயமின்றி எவர் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் எனக் கூறுகின்றாரோ அவர் தன்னை இறைவன் எனக் கருதுகிறார். நான் அவரிடம் அன்னார் மரணமடைந்து விட்டார்கள் எனக் கூறிக் கொள்கின்றேன். ஆனால் எந்த இறைவனை அன்னார் வணங்குவதற்காக வந்தார்களோ அவன் உயிருடன் தான் இருக்கின்றான் என்று ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த உண்மையின் தாக்கம் ஆகும். இந்தத் தாக்கத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களின் உள்ளத்தில் ஏற்படுத்தினார்கள். உருவிய வாளை கையில் ஏந்திக் கொண்டிருந்த சஹாபாக்கள் விசயத்தைக் காதில் கேட்டதும் தலைகுனிந்தார்கள். மேலும் அன்னார் மரணமடைந்து விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொண்டனர்.

**அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கொண்டிருந்த தனிப்பட்ட அன்பு மேற்குறிப்பிட்ட சம்பவம் மூலம் தெளிவாகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மரணத்திற்கு முன்பு ஒரு படையை தயார் செய்தார்கள். அதனை சிரியாவிற்குச் சென்று சில தீயவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பதற்காகத் தயார் செய்தார்கள். இந்தப் படை புறப்படுவதற்கு முன்பே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அன்னாரது மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பெரும்பாலான சஹாபாக்கள் ஒன்றுகூடி அன்னாரிடம் இந்தப் படையை அனுப்புவதை தள்ளிப்போட வேண்டும். ஏனென்றால் நாலாபுறமும் அரபு நாடுகளிலிருந்து கிளர்ச்சிக்கான செய்தி வந்து கொண்டிருந்தது. மக்கா, மதீனா மற்றும் மற்றொரு இடத்தில் மட்டும் தான் ஜமாஅத்தாகத் தொழப்பட்டது. மற்ற இடங்களில் மக்கள் தொழுவதையே விட்டு விட்டனர். மேலும் நாங்கள் ஸக்காத் வழங்கமாட்டோம் எனவும் மக்கள் கூறினர்.

சஹாபாக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் இந்தப் படையைத் தடுத்த நிறுத்த வேண்டும் என்பதற்காக அனுப்பினர். ஏனென்றால் வயதானவர்களும், சிறு பிள்ளைகள் மட்டுமே மதீனாவில் இருந்தார்கள் என்றால், பிறகு கிளர்ச்சியாளர்களின் படையை நாம் எவ்வாறு எதிர்க்க முடியும். கிளர்ச்சி செய்து கொண்டு வரக்கூடிய அந்த கிளர்ச்சிப் படையை மதீனாவிலுள்ள வயதானவர்களால் எவ்வாறு எதிர்க்க முடியும் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், முஹம்மது ரஸுல் (ஸல்) அவர்களது படையைத் தடுத்த நிறுத்த அபூகுஃப்ஸாவின் மகனுக்கு ஆற்றல் இருக்கிறதா? இறைவன் மீது ஆணையாக! கிளர்ச்சியாளர்கள் மதீனாவில் நுழைந்து விட்டாலும் நமது பெண்களின் சடலங்களை நாய்கள் இழுத்துச் சென்றாலும் அந்தப் படை கண்டிப்பாக செல்லும் என்றார்கள்.

இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு அன்பு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் அன்னார் ஸித்தீகியத் என்ற அந்தஸ்தில் இருந்ததினால் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அந்த போதனைகளின் கண்ணியம் இந்த அன்பை விடவும் அதிகமாகும் என உணர்ந்திருந்தார்கள். ஆக இந்த மக்கள் இறைவன் அனுப்பிய போதனைகளைப் பற்றிப் பிடித்தார்கள். அதனை நிலைபெறச் செய்தார்கள். எந்த அளவுக்கென்றால் எதிரிகளும் அதில் சிறிதளவு கூட மாற்றம் செய்யப்படவில்லை என ஒப்புக் கொள்கின்றனர். கிறிஸ்தவர்கள், யூதர்கள், இந்துக்கள் போன்ற அனைத்து பகைமை சமயத்தவர்களும் திருக்குர்ஆனில் ஒரு புள்ளி கூட மாற்றப்படவில்லை என ஏற்றுக் கொள்கின்றனர். இன்று இங்குள்ள பெயர் தாங்கிய அறிஞர்கள் திருக்குர்ஆனில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என கூறி வருகின்றனர். ஆனால் இதில் ஒரு புள்ளியாவது மாற்றப்பட்டிருப்பதாக இவர்களால் நிரூபிக்க முடியாது. 1400 வருடங்களுக்கு முன்பிருந்த அதே திருக்குர்ஆன் தான் இன்றும் இருக்கிறது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்தக் காலகட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பி இருக்கின்றான். இதன்படி அவர்கள் நல்லொழுக்கத்தை மேம்படுத்தவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அன்பு, நேசத்தை உள்ளத்தில் ஏற்படுத்தவும், மேலும் முஹம்மது ரஸுல் (ஸல்) அவர்களுடைய சரீஅத்தை தொடரச் செய்யவும் வந்துள்ளார்கள். நாம் இந்த விசயங்களை சஹாபாக்கள் எவ்வாறு பாதுகாத்தார்களோ அவ்வாறு பாதுகாக்க வேண்டும். இதனை நாம் எப்போதும் கவனத்தில் வைக்க வேண்டும். நமக்கும் ஏனைய சமுதாயங்களுக்கும் இடையில் எப்படிப்பட்ட வேறுபாடு இருக்க வேண்டும் என்றால் நாம் இந்த அமானத்தை நிலைபெறச் செய்திருக்கிறோம் என்பது வெளிப்படையாகத் தெரிய வர வேண்டும்.

**மேலும் அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் இப்படிப்பட்ட ஒரு ஜமாஅத் இருந்தது. ஆனால் வருங்கால சந்ததிகளில் இப்படிப்பட்ட உணர்வு இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. ஒருவருக்கு கிடைத்த ஒரு நல்ல பொருள் அவருடைய பிள்ளைகள் அதிலிருந்து தடுக்கப்படுவதை எந்தவொரு அறிவாளியாவது விரும்புவாரா?

பிறகு எவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனையின் மதிப்பையும், கண்ணியத்தையும் அறிவாரோ அவர் அது தனது வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டாம் எனவும், அவரது நிலம் அவரது வீடுகள் அவரது வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டும் என கருதுவார் எனவும் நீங்கள் எப்படி கூறுகின்றீர்கள்?

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

*உலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையுமே ஆகும். (6:33)* இவை அனைத்தும் விளையாட்டுப் பொருள்களே ஆகும். இது எப்படிப்பட்ட தென்றால் கால்பந்து, கிரிக்கெட், ஹாக்கி போன்றதாகும். பிறகு, அரசாங்கம், அவரது நிலம், வீடு, சொத்துக்களை எல்லாம் அபகரித்து விட்டு அதற்குப் பதிலாக கவணை அவனுடைய பிள்ளைக்கு கொடுத்தால் அல்லது உடைந்த கால்பந்தை அவனுடைய பிள்ளைகளுக்கு கொடுத்தால் அல்லது உடைந்த டென்னீஸ் ராக்கெட்டை அல்லது உடைந்த ஹாக்கி மட்டையை அவனுடைய பிள்ளைகளுக்கு கொடுத்தால் அதனை அவர் விரும்புவாரா? அல்லாஹ் கூறுகின்றான்: உலக வாழ்க்கை கேளிக்கையைப் போன்றதாகும். உலகத்திற்கும்

மார்க்கத்திற்கும் உள்ள வேறுபாடு உண்மையான பொருளுக்கும் விளையாட்டுப் பொருள்களுக்கும் உள்ள வேறுபாடாகும்.

எவர் தனது பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த சொத்து கிடைக்க வேண்டாம் எனவும், விளையாட்டு கேளிக்கைக்குரிய பொருள்கள் கிடைத்தால் போதும் என எப்படி விரும்புவார்? இவ்வாறு செயல்படக்கூடிய மக்கள் நம்மில் இல்லையா? அவர்களது பையன் பொய் கூறினாலோ, திருடினாலோ அல்லது வேறு ஏதாவது குற்றம் செய்தால் அதனை ஆதரிக்கின்றனர். பெற்றோர்கள் மறைமுகமாக குற்றம் புரிந்தவனுக்கு உதவி புரிகின்றனர். முதல் விசயம், அவர்கள் பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வி புகட்டுவதிலிருந்து தவிர்ந்திருந்ததால் குற்றவாளி ஆகின்றனர். அவர்களது பார்வையில் நன்மை என்பது ஒரு பொருட்டாக இருந்தால், பிறகு அவர்கள் தமது பிள்ளைகளை அதிலிருந்து தடுத்திருக்க மாட்டார்கள். மேலும் தர்பிய்யத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால், குற்றவாளி என்ற நிலையிலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*நன்மை மற்றும் இறையச்சத்தில் கண்டிப்பாக உதவி செய்யுங்கள். ஆனால் தீமை, பாவம் மற்றும் வரம்பு மீறுதலில் உதவி செய்யாதீர்கள். (5:3)*

கூறுகின்றார்கள்: முதல் பாவம் இதனை செய்துள்ளனர்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

*உங்களையும் உங்களது மனைவி மக்களையும் நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். (66:7)* ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. மேலும் குற்றம் புரிகின்றனர். சிலர் புகார்களை அனுப்பி இருந்தனர். அதற்குப் பதிலாகத் தான் இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இதுபோன்ற புகார்கள் இன்றைய நாட்களிலும் வருகின்றன.

இரண்டாவது குற்றமாக அவர்கள், அல்லாஹ்வின் கட்டளையை முறிக்கின்றனர். அல்லாஹ் மார்க்கத்தை அருளாக ஆக்கி இருக்கின்றான். ஆனால் மார்க்கத்தை விட உலகத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக வாதம் புரிபவர்கள் ஜமாஅத்தில் முதலில் அவர்கள் தங்களது பிள்ளைகளைத் தடுத்து வைக்கின்றனர். மேலும் அவர்கள் ஏதாவது தீமை செய்தால் பிறகு அவர்களுக்கு உதவி புரிகின்றனர். கடைசியில் அவர்கள் எப்படிப்பட்ட குற்றம் புரிகின்றனர் என்றால் அதனை கண்டு நேர்மையும் மனிதயின உணர்வும் வருத்தம் அடைகின்றது. அவற்றை எவ்வாறு அஹ்மதிய்யத்தும் மார்க்கமும் பொறுத்துக் கொள்ள முடியும்?

ஆனால் அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு அவர்களது தாயாரும் சகோதர சகோதரிகளும் உதவி புரிகின்றனர். மேலும் இவ்வாறு உதவி புரிவதன் மூலம் ஈமான் நிலை பெறுமா? என அவர்கள் சிந்திப்பதில்லை. இப்படிப்பட்டவரது மார்க்கம் அழிந்து போய் விடும்.

அன்னார் கூறுகின்றார்கள்: முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களைப் பாருங்கள்! ஒருமுறை சில சஹாபாக்கள் ஒரு குற்றவாளிக்கு சிபாரிசு செய்தார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவன் மீது ஆணையாக! எனது மகள் ஃபாத்திமா திருடி இருந்தாலும் அவரும் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது.

ஆக, தக்வாவும், தூய்மையும் எப்படிப்பட்ட அருள்கள் என்றால் அதனைப் பெறுவதற்கு எவ்வித தியாகமும் செய்யத் தயங்கக் கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து நமக்கு கிடைத்த பொக்கிசம் உயர் நல்லொழுக்கமே ஆகும். நமது சந்ததிகளை அதற்கு வாரிசாக்குவது நமது கடமையாகும். ஏதாவது கவனமின்மையினால் இதில் குறைபாடு ஏற்படும் என்றால், பிறகு மூஃமின் தீமைக்கு உதவி செய்யக் கூடாது. உடனடியாக அந்த குற்றவாளிகளிடமிருந்து விலகி விட வேண்டும். அல்லாஹ் மூஃமின்கள் மூலமாக இப்படிப்பட்ட உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளான் என்றால், இவ்வாறு செய்வது சாத்தியமற்றது என்று எவராலும் கூற முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபி இருந்தார். அவரது உதாரணத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

மர்ஹூம் ஸய்யத் ஹாமித் சா சாஹிப். இவர் ஒரு தூய அஹ்மதி ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது 12 சீடர்களில் ஒருவராக இவரை கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 12 சீடர்களை எண்ணும் போது இவர்களையும் கூறினார்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் இவர்களது நல்ல முடிவில் இவரது உயர்வுக்கு முத்திரையும் வழங்கினார்கள். ஒருமுறை

அவர்களது பையனுடைய கையினால் ஒரு கொலை நடைபெற்றது. இந்தக் கொலை நடைபெற்ற சமயத்தில் மக்களது அனுதாபமும் அந்த பையனுடனேயே இருந்தது. இந்த சஹாபி ஸய்யத் ஹாமித் சா சாஹிப் உடைய மகன் தான் கொலை செய்திருந்தார். கொலை செய்த பிறகும் கூட மக்கள் இவரது மகனுடனே அனுதாபம் காட்டி வந்தனர். கொலை செய்யப்பட்டவர் வரம்பு மீறினார். அதனால் சண்டை நடைபெற்றது. அப்போது அவரது பையன் ஒரு குத்து குத்தினார். அதில் எதிரி மரணமடைந்து விட்டார். இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறத்தான் செய்கின்றன. ஹஸ்ரத் மூஸா (அலை) உடைய சம்பவமும் இதனைப் போன்றதாகும்.

ஆங்கிலேயராக இருந்த ஸியால்கோட்டின் டெபுட்டி கமிசனர் குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் நிரூபிக்கப்படா விட்டாலும் கண்டிப்பாக தண்டனை வழங்கக்கூடிய அதிகாரிகளைப் போன்றவராவார். இதன் மூலம் தனது கண்ணியம் நிலைபெறச் செய்ய வேண்டும் என நினைப்பார். அவருக்கு மீர் ஹாமித் சாஹிப் தனது அலுவலகத்தின் Superindentent என்பது நினைவுக்கு வந்தது. அவர்கள் அந்த டெபுட்டி கமிசனர் உடைய அலுவலகத்திலேயே தான் இருந்தார்கள். நான் இவருடைய பையனுக்கு தண்டனை வழங்கினால் எனது நீதியின் உணர்வு பற்றி புகழ்ந்து கூறப்படும் என அவர் கருதினார். எனவே சா சாஹிபை அழைத்து உண்மையிலேயே உங்களது மகன் கொலை செய்தாரா? எனக் கேட்டார். அதற்கு ஹாமித் சா சாஹிப் நான் சம்பவத்தின் போது அங்கு இல்லை. ஆனால் அவன் தான் கொலை செய்தான் எனக் கேள்விப்பட்டேன் என்றார்கள்.

அதற்கு அவர் நீங்கள் உமது மகனை அழைத்து குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி கூறுங்கள். இதன் மூலம் மக்களுக்கு நாம் நீதியில் எந்த விதமான பாகுபாடு காட்டுவதில்லை எனத் தெரிய வர வேண்டும் என்றார். அன்னார் தனது மகனை அழைத்து நீ இந்த நபரைக் கொன்றாயா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆமாம் கொலை செய்தேன் என்றார். பிறகு உண்மையை ஒப்புக் கொள் என்றார்கள். மக்கள், உமது வாலிப மகனை ஏன் தூக்கிலிட விரும்புகின்றீர்கள் எனக் கேட்டனர். அதற்கு அவர்கள் இவ்வுலக தண்டனையை விட மறுவுலகத் தண்டனை கடினம் வாய்ந்ததாகும் எனக் கூறினார்கள். மேலும் தனது மகனிடம் குற்றத்தை ஒப்புக் கொள் என அறிவுரை வழங்கினார்கள். அவனும் குற்றத்தை ஒப்புக் கொண்டான். மேலும் அந்தப் பையன் கிரிக்கெட் விளையாட்டு வீரர் ஆவர். எந்த மேஜிஸ்டிரேட்டிடம் இவரது வழக்கு சென்றதோ அவரும் கிரிக்கெட் விளையாடக் கூடியவர் ஆவார். அவருக்கு கிரிக்கெட் கிளப்பிலிருந்து உண்மையான விசயம் தெரிய வந்தது.

மேலும் மேஜிஸ்டிரேட்டிற்கு ஏதாவது விசயத்தின் மீது உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் பிறகு குற்றவாளியிடம் எதுவும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஆக, அவரே காவல்துறையினரிடம் சாட்சியளித்து பிறகு அந்த பையனுக்கு விடுதலை கிடைத்தது. எந்த விதமான கேள்வியும் கேட்காமலேயே அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆக உண்மையின் காரணமாக அவர் விடுதலை ஆனார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கடந்த நாட்களில் இதுபோன்ற ஒரு வழக்கு சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடைய சகோதரர் மீது தொடரப்பட்டது. அந்த சமயத்தில் சவுத்ரி சாஹிப் வெளிநாட்டில், இலண்டனில் இருந்தார்கள். அவர்கள் தன்னுடைய சகோதரருக்கு இது ஈமானை சோதிக்கக்கூடிய நேரம் ஆகும். ஒருவேளை நீங்கள் குற்றம் செய்திருந்தீர்கள் என்றால் பிறகு நான் மூத்த சகோதரன் என்ற ரீதியில் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றேன். இந்த உலகத்தின் தண்டனையை விட மறுமையின் தண்டனை மிகவும் கடினமானதாகும். எனவே அதனை சகித்துக் கொள்ளுங்கள். மேலும் உண்மையைப் பேசுங்கள் என்றார்.

அடுத்து கூறுகின்றார்கள்: ஸியால்கோட்டைச் சார்ந்த நமது ஒரு நண்பர் அவர் தற்போதும் உயிருடன் தான் இருக்கிறார். அஹ்மதியான பிறகு அவருக்கு லஞ்சம் வாங்குவது இஸ்லாமிய போதனைக்கு மாற்றமானது எனத் தெரிய வந்த போது, அவர் யார் யாரிடமெல்லாம் லஞ்சம் வாங்கினாரோ அவர்களது வீட்டிற்குச் சென்று லஞ்சம் வாங்கிய தொகையை திருப்பிக் கொடுத்தார். இதன் மூலம் அவர் கடனாளியாகவும் ஆகி விட்டார். ஆனால் இதனைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நமது ஜமாஅத்தில் அனைத்து விதமான அமல்களுக்கும் ஏற்ப இப்படிப்பட்ட உதாரணங்கள் கிடைக்கப்பெறும். இதனைப் பார்த்து நாம் சஹாபாக்களின் முன்மாதிரி எனக் கூறலாம். நாம் இதனைக் கண்டு மகிழ்ச்சி அடையக் கூடாது. மாறாக முழு ஜமாஅத்தும் இதுபோன்று ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

நான் நண்பர்களுக்கு கவனமூட்டுகின்றேன். நீங்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதத்திற்கு கண்ணியம் அளியுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு சொத்துக்களை வழங்கவில்லை. அரசாங்கத்தை வழங்கவில்லை. புதிதாக எதனையும் கண்டுபிடிக்கவில்லை. குதூகலமாக இருப்பதற்கான பொருள்களை நமக்கு வழங்கவில்லை. நமக்கு உண்மையை மட்டும் தான் வழங்கி இருக்கிறார்கள். அதுவும் அல்லாஹ் 1300 ஆண்டுகளுக்குப் பிறகு அருளிய இந்த அருளை தனது கையினால் நாம் எறிபவர்களாக இருந்தோம் என்றால் பிறகு எவ்வளவு பெரிய துரதிஷ்டமாக அது இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு இஸ்லாத்தை வழங்கியுள்ளார்கள். உயர் நல்லொழுக்கத்தை வழங்கியுள்ளார்கள். மேலும் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தி அதன்படி செயல்பட முடியும் என நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

பிறகு அன்னார் சம்பவங்களை எடுத்துரைக்கின்றார்கள்: மார்ட்டின் கிளார்க் நீதிமன்றத்தில் மிர்ஸா சாஹிப் என்னைக் கொலை செய்ய ஒரு நபரை அனுப்பினார் என வழக்கு தொடர்ந்தார். முஸ்லிம்களில் ஆலிம்கள் என்று அழைக்கப்படக் கூடியவர்களும் இதில் இணைந்து விட்டனர். இந்த வகையில் மவ்லவி முஹம்மது ஹூஸைன் பட்டாலவி அன்னாருக்கு எதிராக சாட்சி கூற வந்திருந்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு இதற்கு முன்பாகவே அல்லாஹ் இந்த வழக்கில் ஒரு மவ்லவி வருவார். ஆனால் அல்லாஹ் அவரை இழிவடையச் செய்வான் என அறிவித்திரந்தான். இல்ஹாமில் இழிவு பற்றி கூறப்பட்ட பின்னரும் இல்ஹாம் நிறைவேறுவதற்கு வெளிப்படையாக முயற்சி செய்வதும் அவசியமாகும்.

முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடம் மவ்லவி ஃபஸல்தீன் சாஹிப். இவர் லாஹூரைச் சேர்ந்த ஒரு வழக்குறைஞர் ஹஸ்ரத் சாஹிப் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடினார். அவர் என்னிடம் கூறினார்கள். நான் மவ்லவி முஹம்மது ஹூஸைன் பட்டாலவிக்கு இழிவு ஏற்படுத்தும் ஒரு கேள்வியை அவரிடம் கேட்க விரும்பிய போது ஹுஸுர் அவர்கள் அந்த கேள்வியைக் கேட்பதிலிருந்து என்னைத் தடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இப்படிப்பட்ட கேள்வி கேட்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது எனக் கூறினார்கள். மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்கள் இந்தக் கேள்வி அவரிடம் கேட்கவில்லை என்றால் வழக்கில் உங்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்று ஹுஸுரிடம் கூறினார்கள். இல்லை. நாம் இந்தக் கேள்வியைக் கேட்க அனுமதிக்க மாட்டோம் என்றார்கள். இந்தக் கேள்வி அவரது சுயமரியாதையில் இழுக்கை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

மவ்லவி ஃபஸ்தீன் சாஹிப் அஹ்மதி அல்லர். இவர் ஹனஃபி ஆவார். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சார்பாக வழக்குறைஞராக நியமிக்கப்பட்டிருந்தார். அன்னார் சார்பாக வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். இவர் ஹனஃபி உடைய தலைவரும் ஆவார். அஞ்சுமன் நுஃமானியாவுடைய சிறந்த ஊழியரும் ஆவார். இதனால் மார்க்க அடிப்படையில் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தார் என்று முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால் அஹ்மதி அல்லாத மஜ்லிஸ்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது ஏதாவது ஆட்சேபனை செய்யப்பட்டால் உடனே அவர் அதனை மறுப்பார். கொள்கை அடிப்படை என்பது வேறாகும். ஆனால் நான் அவரது நல்லொழுக்கத்தைப் பார்த்திருக்கின்றேன். நமது மவ்லவிமார்கள் எவரும் அன்னாருடன் போட்டியிட முடியாது. நல்லொழுக்க ரீதியில் அவர்களை எப்படிப்பட்ட சூழ்நிலையில் சோதித்துள்ளேன் என்றால் எந்தவொரு மவ்லவியும் அன்னாரின் இடத்தில் நிற்கவே முடியாது.

**முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

எந்த இறைவன் முஹம்மது ஹூஸைன் உடைய இழிவைப் பற்றி முன்னரே அறிவித்திருந்தானோ அவன் ஒருபுறம் அன்னாருடைய நல்லொழுக்கத்தை வெளிக்காட்டி அன்னாருடைய கண்ணியத்தை உயர்த்தினான். மறுபுறம் அசாதாரணமான வகையில் செயல்பட்டு மவ்லவி சாஹிபை இழிவுபடுத்தியும் விட்டான். இது எவ்வாறு நடைபெற்றதென்றால், முன்னர் இருந்த கடுமையான எதிரி தான் டெபுட்டி கமிசனர் ஆக இருந்தார். அவர் அன்னாருடைய முகத்தைப் பார்த்தவுடன் அவரது நிலைமை மாறி விட்டது. குற்றவாளியாக அவர் முன்பு சென்ற போதும், ஹஸ்ரத் சாஹிபிற்காக நாற்காலியை வரவழைத்தான். அதில் அன்னாரை அமரும்படி கூறினார். மவ்லவி முஹம்மது ஹூஸைன் சாஹிப் சாட்சி கூறுவதற்காக வந்திருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது கையில் விலங்கு மாட்டப்பட்டிருக்கும் என்றும் குறைந்தபட்சம் அன்னாரை இழிவாக நிற்க வைத்திருப்பார்கள் எனவும் நம்பி வந்தார்.

ஆனால் மேஜிஸ்டிரேட் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தனது அருகில் நாற்காலியில் உட்கார வைத்திருப்பதைப் பார்த்து, கோபமடைந்து எனக்கும் நாற்காலி வழங்கப்பட வேண்டும் எனக் கூறினார். அதற்கு நீதிமன்றம் உங்களுக்கு அதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றது. மீண்டும் மீண்டும் கேட்ட போது நீதிபதி அவரை மிகவும் கடினமாகக் கண்டித்தார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உயர் நல்லொழுக்கத்தின் காரணமாக அன்னாருக்கு கண்ணியம் கிடைத்தது. இதற்கு எதிராக கோபம் வரும் போது அதனை அடக்கக்கூடிய எந்த நபர் ஜமாஅத்தில் இருக்கின்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பாருங்கள். சம்பவம் உண்மையாக இருந்தும் கூட எதிரி இழிவடைவதை அன்னாரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் நமது நண்பர்கள் உணர்ச்சிவசப்பட்டு தீய வார்த்தை பேசவும், கை கலப்பை ஏற்படுத்தவும் செய்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கருணை என்ற உணர்ச்சி தான் மேலோங்கி உள்ளது. கோபத்தை நாம் குறைத்து விட்டோம் எனக் கூறுகின்றார்கள்.

ஆக நமது ஜமாஅத்திற்கு ஒருபுறம் இந்த உயர் நல்லொழுக்கத்தை தமக்குள் ஏற்படுத்த வேண்டும். மறுபுறம் தீமையை முற்றிலுமாக வெறுக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்டித்தந்தது போன்று வெறுக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமும் இந்த இரண்டு அம்சங்களும் தென்படுகின்றது. இதிலிருந்து மூஃமின் என்பவர் ஒருங்கிணைக்கப்பட்டவராவார் என்பது தெளிவாகிறது.

அன்னார் சில சம்பவங்களைக் கூறியுள்ளார்கள். அன்னார் பண்டித் லேக்ராம் ஸலாம் கூறியது போது அதற்கு பதில் ஸலாம் கூறவில்லை. ஏனென்றால் அவர் நபி (ஸல்) அவர்களைப் பற்றி இழிவாகப் பேசி வந்தார். மறுபுறம் தன்னைப் பற்றி பேசப்படும் போது முஹம்மது ஹுஸைன் சாஹிபிற்கு இழிவு ஏற்படும் வகையில் எவ்விதமான செயலையும் செய்யக்கூடாது எனக் கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். எவர் தனது பிள்ளைகளுக்கு நல்லொழுக்கங்களைக் கற்பிக்க மாட்டாரோ அவர் பிள்ளைகளையும் எதிர்க்கின்றார். ஜமாஅத்தையும் எதிர்க்கின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் எதிர்க்கின்றார். இறைவனையும் எதிர்க்கின்றார்.

கூறுகின்றார்கள்: நான் பல்வேறு அறிவுரைகளை வழங்கி வருகிறேன். குத்பாக்களைக் கொடுத்து வருகிறேன். இது ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைபெறுகிறது. முந்தைய கலீஃபாக்களும் கொடுத்தார்கள். நானும் குத்பா கொடுக்கின்றேன்.

**இதற்கு உதாரணத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:**

சொற்பொழிவுகள் ஆற்றப்படும் போது கொஞ்சமாவது அதன் தாக்கம் ஏற்படுகின்றது. சில சமயங்களில் சொற்பொழிவு ஆற்றுவதை நிறுத்தினால் பிறகு தாக்கம் ஏற்படுவது நின்று விடுகின்றது. அதற்கு உதாரணம் கூறுகின்றார்கள். Jack in the Box என்ற விளையாட்டுப் பொருள் இருக்கிறது. ஒரு டப்பாவுக்குள் ஒரு குதிக்கும் ஒரு பொம்மை இருக்கும். அந்த டப்பாவுடைய மூடியை முடினால் அந்த பொம்மை உள்ளேயே இருக்கும். மூடியைத் திறந்தால் அது குதித்தவாறு வெளியில் வரும். இதே நிலைமை தான் இந்த மக்களிடமும் இருக்கின்றது. அறிவுரை வழங்கிக் கொண்டே இருந்தால் சில காலம் வரை அது நிலைபெற்றிருக்கிறது. ஆனால் அறிவுரை கூறுவதை நிறுத்தி விட்டால் பிறகு அது மீண்டும் குதித்து பழைய நிலைக்கே வந்து விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் யாருக்கும் தொடர்ந்து அறிவுரை வழங்கிக் கொண்டே செல்லும் காலத்தை வழங்கவில்லை. உண்மையான விசயம் என்னவென்றால் மனிதன் மூஃமினாக ஆக வேண்டும். பிறகு இந்த நிலை முற்றுப் பெற்று விடும். மேலும் இந்த குழப்பமும் ஈமான் நிலைபெறும் வரைதான் இருக்கும்.

ஆக கவனமூட்டப்படும் போது அதனை கவனமாகக் கேட்ட பின்னர் அதனை வாழ்வில் செயல்படுத்த வேண்டும். இதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றதிற்கான இரகசியம் ஆகும். இந்த விசயம் தான் மனிதனை உண்மையான அடியான் ஆக்குகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பி மிகப்பெரிய பொறுப்பையும் அவர்கள் மீது சுமத்தியுள்ளார்கள். மனிதனுக்குள் பலவீனம் மலை அளவு இருந்தாலும் அவன் அதனை விடுவதற்கு உறுதி கொண்டால் பிறகு எவ்விதமான கஷ்டமும் இல்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரசித்தி பெற்ற ஒரு கூற்று உள்ளது. அதாவது உங்களது உள்ளத்தில் கடுகளவு ஈமான் இருந்தாலும் உங்களால் மலையை அதன் இடத்திலிருந்து நகர்த்த முடியும். இதற்கு என்ன அர்த்தம் என்றால், பாவம் மலையளவு இருந்தாலும் மனிதனது உள்ளத்தில் கடுகளவு ஈமான் இருந்தாலும் அவரால் மலைகளைத் தகர்க்க முடியும். மூஃமின் இந்த வழியில் எவ்வித தடையும் இல்லை என எந்த நாள் நினைப்பாரோ அப்போதே அனைத்து தடைகளும் நீங்கி விடுகின்றன.

ஆக ஜமாஅத் இதனை உணர வேண்டிய அவசியம் உள்ளது. தற்போது நான் இதனைக் கூற விரும்புகின்றேன். சகோதரர்கள் தங்களது பிள்ளைகளையும் ஜமாஅத்தின் ஏனைய இளைஞர்களையும் சீர்திருத்துங்கள். உங்களையும் சீர்படுத்துங்கள். பொய், திருட்டு, ஏமாற்றுதல், தீய நடத்தை, பொறாமை பித்அத்துகள் போன்றவற்றை விட்டு விடுங்கள். மேலும் நம்முடன் தொடர்பு கொள்பவர்களான இவர்கள் மிகவும் சிறந்த மனிதர்கள் என கூறும் வகையில் செயல்பட வேண்டும்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இந்த அருள் திரும்ப வருவதற்கு 1300 வருடங்கள் ஆகியுள்ளது. அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நமக்கு கிடைத்திருக்கின்றது. நாம் இதற்கு மதிப்பளிக்கவில்லை என்றால் மீண்டும் 1300 வருடங்கள் வரை சென்று விட்டால், அப்போது வரை வரக்கூடிய அனைத்து சந்ததிகளின் சாபங்களும் நம்மீது விழும். எனவே உங்களது அனைத்து நன்மைகளையும் தனது பிள்ளைகளுக்குக் கொடுங்கள். அவர்கள் அதனை அவர்களது சந்ததிகளுக்கு பிறகு அவர்கள் அவர்களுடைய சந்ததிகளுக்கு கொடுக்க வேண்டும்.

மேலும் இந்த அமானிதம் பாதுகாப்பாக எந்த அளவு நீண்டு கொண்டே செல்ல வேண்டும் என்றால் ஆயிரம் வருடம் வரை இதற்குரிய நற்கூலி நமக்கு கிடைத்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நன்மை எந்த மனிதர் மூலமாக நிலைபெற்றதோ அது எப்போது வரை உலகில் நிலைபெற்றிருக்குமோ மேலும் எந்த அளவு மக்கள் அதனை மேற்கொள்வார்களோ அந்த அனைத்தின் நற்கூலியும் அந்த மனிதர் பெயரில் எழுதப்படும்.

ஆக, பிரதிபலனும் பெரியதாகும். அமானிதமும் அதன் அளவில் மிகப்பெரியதாகும். இதன் பக்கம் நாம் கவனமூட்ட வேண்டும். அல்லாஹ் இந்த அமானிதத்திற்குரிய உரிமையை செலுத்தக்கூடிய நல்வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக! மேலும் நமது சான்றோர்கள் மூலம் செலுத்தப்பட்டு வந்த அந்த அமானிதங்களின் உரிமைகளை நிறைவேற்றுபவர்களாக நம்மை ஆக்க வேண்டும். மேலும் இந்த அமானிதத்தை நாங்கள் இதன் உரிமையை வழங்குவோம் என உடன்படிக்கை எடுத்து ஏற்ற மக்களுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பினை வழங்குவானாக! சந்ததி சந்தியாக இந்த உரிமை நிறைவேற்றப்பட்டு வரட்டுமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **29.11.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456